# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **11/ந/2018**

ஆணை எண். **16/2018**

நாள் : **24/01/2018**

**திருமதி சீத்தாலட்சுமி நாராயணன்,**
**ஹைதராபாத்.**

– **முறையீட்டு மனுதாரர்**

நகராட்சி நகராட்சி,
மேட்டூர் நகராட்சி.

– **எதிர் மனுதாரர்**

சேலம் மாவட்டம், மேட்டூர் டவுன், தூக்கணாம்பட்டி, கதவு எண்.6/94D, முகவரியைச் சேர்ந்த திருமதி சீத்தாலட்சுமி நாராயணன் அவர்கள் தற்பொழுது தெலுங்கானா மாநிலம், ஹைதராபாத் நகர், மணிகொண்டா, லங்கோஹில்ஸ், கதவு எண்.15, L.H. 404 முகவரியில் வசித்து வருகிறார். மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 18.01.2018 அன்று பெறப்பட்டு, 11/ந/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

தெலுங்கானா மாநிலம், ஹைதராபாத் நகர், மணிகொண்டா, லங்கோஹில்ஸ், கதவு எண்.15, L.H. 404 முகவரியில் தற்பொழுது வசித்து வரும் திருமதி சீத்தாலட்சுமி நாராயணன் என்பவர், மேட்டூர் நகராட்சியில் உதவியாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற தனது தந்தையார் திரு V.S. நாராயணன் அவர்கள் 16.09.2017 அன்று காலமாகிவிட்டதாகவும், அவருக்கு வழங்கப்படவேண்டிய சேமநலநிதிக்கான வட்டித் தொகையினை அவரது ஒரே வாரிசுதாரரான தனக்கு வழங்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். முறையீட்டு மனுதாரர் முறையான விண்ணப்பத்தினை மேட்டூர் நகராட்சி ஆணையருக்கு சமர்ப்பிக்கும் நிலையில், உரிய நடைமுறைகளைப் பின்பற்றி, காலஞ்சென்ற மேட்டூர் நகராட்சிப் பணியாளர் திரு V.S. நாராயணன் அவர்களுக்கு வழங்கப்படவேண்டிய சேமநலநிதிக்கான வட்டித் தொகையினை இறப்புச்சான்று, வாரிசு சான்று ஆவணங்களை சரிபார்த்து முறையீட்டு மனுதாரருக்கு வழங்கிடப் பரிசீலிக்குமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, சனவரி திங்கள், 24–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப் பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திருமதி சீத்தாலட்சுமி நாராயணன்,
எண்.15, L,H, 404, லங்கோ ஹில்ஸ்,
மணி கொண்டா,
ஹைதராபாத் – 500 089.

2. நகராட்சி ஆணையாளர்,
மேட்டூர் நகராட்சி,
மேட்டூர்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி